**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**OS.No.141/2003**
**நாள்.29.10.2025**
**வா.சா.1- காளிமுத்து**
**த/பெ - ராமசாமி**

**12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா சொத்துகள் மற்றும் இதர சொத்துகளையும் சடையப்பகவுண்டர் மற்றும் அவரது வகையறாக்கள் 11.09.1935ம் தேதியில் பாகவிஸ்தி பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. மேற்படி பாகவிஸ்தி பத்திரப்படி தனக்கு பாகமாக கிடைக்கப்பட்ட சொத்துக்களில் சிலவற்றை வேறு நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3. 19.08.1956ம் தேதி சடையப்பகவுண்டர் சின்னம்மாள் என்பவருக்கு சர்வே எண்.1057/6க்கு கட்டுப்பட்ட சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. 12ம் பிரதிவாதி 19.08.1956ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை பற்றி அவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறிய பின்பு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

5. 02.07.1964ம் தேதி சின்னம்மாளிடமிருந்து சடையப்பகவுண்டர் மகன் சத்தியமூர்த்தி சர்வே எண்.1057/6க்கு கட்டுப்பட்ட சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் கூறிய பின்பு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

6. சடையப்பகவுண்டரின் மூத்த தாரத்தின் மகன் சவடமுத்து எனது பாட்டனார் என்றால் சரிதான். சடையப்பகவுண்டரின் இரண்டாவது தாரத்தின் மகன் சத்தியமூர்த்தி என்றால் சரிதான்.

7. சடையப்பகவுண்டர் இறப்பிற்கு பின்னர் சவடமுத்துவும், சத்தியமூர்த்தியும் சொத்துக்களை பாகம் செய்து அவரவர் பாகத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொதுவாக வைத்து அனுபவித்து வருகிறோம்.

8. எனது பாட்டனார் சவடமுத்துவிற்கு பின்னர் எனது தகப்பனார் பெயருக்கு பட்டா ஏற்பட்டு அனுபவித்துவருகிறோம் என்றால் எனது தாத்தா பெயரில் 1935ம் ஆண்டு பாகவிஸ்தி பத்திரம் உள்ளது. எங்களது பெயரில் பட்டா உள்ளது.

9. எங்களது பெயரில் உள்ள பட்டாவில் கண்டுள்ள சொத்துக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும், சத்தியமூர்த்தி பெயரில் உள்ள சொத்துகள் இவ்வழக்கில் காட்டப்பட்டுள்ளன என்றாலும் சரிதான்.

10. வா.சா.ஆ.1 ன்படி சடையப்பகவுண்டர் மற்றும் அவரது மகன்களான சவடமுத்து மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து சடையப்பகவுண்டர் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால் அதனடிப்படையில் பாகம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகவிஸ்தி ஏற்படுத்தப்பட்ட 1935ம் ஆண்டில் சத்தியமூர்த்தி மைனராக இருந்திருக்கலாம். ஆனால், சடையப்பகவுண்டருக்கும் சவடமுத்துவிற்கும் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. சடையப்பகவுண்டரும் சவடமுத்துவும் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால் பாகம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**